**சுருக்கம்**

நிதி – பேரூராட்சிகள் நிர்வாகம் – மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி மாநில நிதி பகிர்வு 2009–2010ஆம் ஆண்டில் பிப்ரவரி, 2010 மற்றும் மார்ச், 2010 ஆகிய மாதங்களுக்கு மாநில நிதிப் பகிர்வுத் தொகை ரூ.65,69,83,140/– விடுவித்து ஆணையிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை**

**அரசாணை (ப) எண். 128** **நாள்: 26.03.2010**

**12, பங்குனி, திருவள்ளுவர் ஆண்டு 2041**

படிக்கப்பட்டது:

1. அரசாணை எண்.199, நிதித் (எப்சி4) துறை, நாள் 25.05.2007
2. அரசாணை (ப) எண்.405, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை, நாள் 11.09.2009.
3. அரசாணை (ப) எண்.402, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை, நாள் 10.09.2009.
4. அரசாணை (ப) எண்.403, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை, நாள் 10.09.2009.
5. பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் ந.க.எண். 14100/2009/ஈ1, நாள் 02.02.2010.

**ஆணை:**

பேரூராட்சிகளின் இயக்குநரின் பார்வை ஐந்தில் படிக்கப்பட்ட கடிதத்தில், 2009–2010ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் பேரூராட்சிகளுக்கு மாநில நிதிப் பகிர்வு நிதி மான்யமாக ரூ.382,89,36,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், பத்தி எண்.3(ix)-ல் மாநில நிதி பகிர்வு நிதி ஒதுக்கீட்டில் ஒவ்வொரு பேரூராட்சிக்கும் குறைந்தபட்ச மான்யம் ரூ.10.00 இலட்சம் அளிக்கப்பட வேண்டும் எனவும், மீதமுள்ள தொகையை பேரூராட்சிகளின் மக்கள் தொகை அடிப்படையில் பிரித்தளிக்க வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது என்றும் இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஏப்ரல், 2009 முதல் ஜனவரி, 2010 வரை மாதம் 1–க்கு ரூ.1.00 இலட்சம் வீதம் 10 மாதங்களுக்கு 561 பேரூராட்சிகளுக்கும் பேரூராட்சி 1–க்கு ரூ.10.00 இலட்சம் வீதம் ரூ.56.10 கோடி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது என்றும், மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 2009–2010ஆம் ஆண்டிற்கு பேரூராட்சிகளில் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திற்கு மாநில பகிர்வு நிதி மான்யத் தொகையிலிருந்து ரூ.24.00 கோடி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது என்றும், நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஏப்ரல், 2009 முதல் ஜனவரி, 2010 வரையிலான 10 மாதங்களுக்கு பேரூராட்சிகளின் மக்கள் தொகை அடிப்படையில் ரூ.237,09,52,860/– பிரித்து வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வாறே மேற்குறிப்பிட்ட தொகைகள் யாவும் பேரூராட்சிகளின் இயக்குநரின் செயல்முறை ஆணைகள் வாயிலாக அனைத்து பேரூராட்சிகளுக்கும் பிரித்தளிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், 2009–2010ஆம் ஆண்டு மூன்றாவது மாநில நிதி ஆணையரகத்தின் பரிந்துரையின் அடிப்படையில் வரவு–செலவு ஒதுக்கீடு செய்யப்பட்ட மாநில பகிர்வு நிதி தொகை ரூ.412,03,34,000/–லிருந்து கீழ்க்குறித்தவாறு விடுவிக்கப்பட்டுள்ளது என பேரூராட்சிகளின் இயக்குநர் தெரிவித்துள்ளார்:-

| | | |
|---|---|---|
| 1) | மொத்த ஒதுக்கீடு தொகை | ரூ.412,03,34,000/– |
| 2) | விடுவிக்கப்பட்டது | |
| | 1) அரசாணை (ப) எண்.405 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை, நாள் 11.9.2009–ன்படி பேரூராட்சி ஒன்றுக்கு ரூ.10.00 இலட்சம் வீதம் 10 மாதங்களுக்கு 561 பேரூராட்சிகளுக்கு ஏப்ரல், 2009 முதல் விடுவிக்கப்பட்டது. | ரூ.56,10,00,000/– |
| | 2) அரசாணை (ப) எண்.402 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை, நாள் 10.9.2009–ன்படி 2009–2010ஆம் ஆண்டு அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திற்கு 140 பேரூராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டது. | ரூ.24,00,00,000/– |
| | 3) அரசாணை (ப) எண்.403 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை, நாள் 10.9.2009–ன்படி மக்கள் தொகை அடிப்படையில் 561 பேரூராட்சிகளுக்கு ஏப்ரல் 2009 முதல் ஜனவரி 2010 வரை விடுவிக்கப்பட்டது. | ரூ.237,09,52,860/– |
| | **மொத்தம்** | **ரூ.317,19,52,860/–** |
| | **மீதம் விடுவிக்கப்பட வேண்டிய தொகை** | **ரூ.94,83,81,140/–** |

3. எனவே, பேரூராட்சிகளுக்கு பிப்ரவரி, 2010 மற்றும் மார்ச், 2010 மாதங்களுக்கு மக்கள் தொகை அடிப்படையிலான மாநில நிதிப் பகிர்வுத் தொகை பிரித்து வழங்க வேண்டியுள்ளதால் பேரூராட்சிகளின் மாநில நிதிப் பகிர்வுத் தொகை ஒதுக்கீடுத் தொகை ரூ.412,03,34,000/–ல் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட தொகை ரூ.317,19,52,860/– போக மீதமுள்ள தொகை ரூ.94,83,81,140/–யை பேரூராட்சிகளுக்கு விடுவிக்குமாறும் அத்தொகையில் இருந்து பேரூராட்சியால் செலுத்தப்பட வேண்டிய கடன் நிலுவைகள், மின்கட்டண நிலுவைகள், ஓய்வு பெற்ற பேரூராட்சி பணியாளர்களின் ஓய்வூதிய பயன்கள், பங்குத் தொகை மற்றும் டுபிட்கோ நிறுவனம் மூலம் பெறப்பட்ட கடன், வட்டித்தொகை ஆகியவைகளை மாநில நிதிப் பகிர்வுத் தொகையில் பிடித்தம் செய்து உரிய தலைப்பில் செலுத்திடவும் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அதிகாரம் அளிக்குமாறும் அரசின் ஆணை வேண்டி செயற்குறிப்பினை அரசிற்கு அனுப்பியுள்ளார்.

4. மேலே பத்தி 3–ல் உள்ள பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் கருத்துருவை அரசு கவனமாக ஆய்வு செய்து பேரூராட்சிகளின் மாநில நிதிப்பகிர்வுத் தொகை 2009–2010ஆம் ஆண்டு திருத்திய ஒதுக்கீட்டுத் தொகை ரூ.382,89,36,000/–ல் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட தொகை ரூ.317,19,52,860/– போக மீதமுள்ள தொகையான ரூ.65,69,83,140/– (ரூபாய் அறுபத்தி ஐந்து கோடி அறுபத்தி ஒன்பது இலட்சம் எண்பத்தி மூன்று ஆயிரம் நூற்றி நாற்பது மட்டும்) ஐ மக்கள் தொகை அடிப்படையிலான மாநில நிதிப்பகிர்வுத் தொகையின் மீதமுள்ள நான்கு தவணைகளுக்காக பேரூராட்சிகளுக்கு விடுவித்து அத்தொகையிலிருந்து பேரூராட்சியால் செலுத்தப்பட வேண்டிய கடன் நிலுவைகள், மின்கட்டண நிலுவைகள், ஒய்வு பெற்ற பேரூராட்சி பணியாளர்களின் ஒய்வூதிய பயன்கள், பங்குத் தொகை மற்றும் டுபிட்கோ நிறுவனம் மூலம் பெறப்பட்ட கடன் வட்டித் தொகை ஆகியவைகளை மாநில நிதிப் பகிர்வு தொகையில் பிடித்தம் செய்து உரிய தலைப்பில் செலுத்திடவும் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அதிகாரம் அளித்து அரசு ஆணையிடுகிறது.

5. இச்செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"3604.00 உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்–193 – நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள் அல்லது அதற்கு சமமான அமைப்புகளுக்கு உதவி–I–திட்டத்தில் சேராதது–AA–மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி பேரூராட்சிகளுக்கு மானியங்கள்–பேரூராட்சி நிருவாக இயக்குநரின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ளவை–09 உதவி தொகை–02 மூலதனச் செலவுக்கான உதவித்தொகை (DPC No.3604-00-193-AA-0927)"

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண். 14985/MAWS/2010, நாள் 26.3.2010–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன்மார்டி
அரசு செயலாளர்.

<u>பெறுநர்:–</u>
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை – 108.
சம்பளக் கணக்கு அலுவலர், (வடக்கு) சென்னை – 1.
மாநில கணக்காயர், சென்னை – 18.
<u>நகல்:–</u>
செயலரின் தனி செயலர், ந.நி(ம)கு.வ.துறை, சென்னை 9
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம், சென்னை 108.
ந.நி.(ம)கு.வ.(அந.2) துறை, சென்னை –9
நிதி (ந.நி.(ம)கு.வ. / நிதிக்குழு.4 / வழிவகை–I) துறை, சென்னை –9
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.
உதிரி/நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது./

பிரிவு அலுவலர்.